மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற நிலையே இந்த ஆட்சியில் என்றைக்கும் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இணைப்புப் பேருந்துகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இணைப்புப் பேருந்து களுக்கு 77 இருக்கைகளுக்கு நாம் வரி கட்ட வேண்டியிருக்கிறது. அந்த இணைப்புப் பேருந்துகளில் பயணம் செய்பவர்கள், முதலிலே பயணம் செய்தால், மீண்டும் அந்த இணைப்புப் பேருந்திலே பயணம் செய்ய அவர்கள் விரும்புவதில்லை. ஆல்வே, வருமானம் குறைந்து கொண்டு இருக்கிற காரணத்தினாலே இதைக் காட்டிலும் மிக அழகான பேருந்துகளை ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே விடப்பட்டு கிறது. ஆகவே, இது தேவையில்லை என்று குறிப்பிட்டேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 227 திரு கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. ஜெ. பாலகங்காதரன் கேட்கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

227—

சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக் கன்றுகள்.

*11209—திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூக நலக்காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் முந்திய வருடங்களில் நடப்பட்ட மரக்கன்றுகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பட்ட செடிகளில் பட்டுப் போனவைகளை மாற்றுவது (Replacement of casualities)—பற்றும் களை நீக்கி மண் கொத்தி விடுதல் (Soil working) போன்ற வேலைகள் செய்யப்பட்டு மரக்கன்றுகள் பராமரிக்கப்பட்டுகின்றன.

1993 ஏப்ரல் 2]

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கம் கொடுத்தார்கள். இருந்தாலும் அங்கே நாங்கள் மாவட்டந் தோறும், கிராமங்கள் தோறும் நடப்பட்ட அந்த இடங்களுக்குச் சென்று பார்க்கும்போது கன்றுகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்தது. கன்றுகளைப் பராமரிப்பதற்கு என்று தனியாக அதிகாரிகளை நியமிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு எல்லாப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக 1981-82 முதல் 1991-92 வரை எழுப்பப்பட்ட சுமார் 1 லட்சத்து 87 ஆயிரத்து 820 ஹெக்டர் நிலங்களில் மரம் நடப்பட்டிருக்கிறது. இவர்கள் குறிப்பிட்டதைப்போல அதைப் பராமரிப்பதற்காக கிராம சமூக நல ஊழியர்கள் என்ற முறையில். 1,914 பேர்களும், தோட்டக்காவலர்கள் என்ற முறையில் 3,097 பேர்களும் இருக்கிறார்கள் ஆண்டு ஒன்றுக்கு அவர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் 1989-90-ல் 3 கோடியே 23 லட்சம், அதைப்போல 1990-91 ஆவது ஆண்டு 2 கோடியே 51 லட்சம், 1991-92 ஆவது ஆண்டு 2 கோடியே 33 லட்சம் என்ற செலவில் இந்த அரசு செலவு செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது இதை பராமரிப்பதில் சிறிது கடினம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் இங்கே இருக்கின்ற பொதுமக்களும் ஒத்துழைப்பு தந்தாக வேண்டும். இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், மரக்கன்றுகளை நடுகின்ற போது கிராமப்புறங்களில் அங்கு இருக்கின்ற ஏரிகள், அது போல பல்வேறு புறம்போக்கு நிலங்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட நிலங்களிலே நாம் நடுகிறோம், அப்படி நடுகின்றபோது கிராமங்களில் இருக்கின்ற ஆடு மாடுகளை அங்கே மேய்க்கின்ற நிலை, அங்கே இருக்கின்ற சிறிய செடிகளை, கொடிகளை வெட்டுவது, இது போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கின்ற வகையில் எல்லோரும் ஒத்துழைப்பு தந்தால்தான் இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் நாம் செய்ய முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் சுமார் 40 பெர்சன்ட் பட்ஜெட்டினுடைய தொகை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக சமூக நலக் காடுகளுக்கு ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் சமூக நலக்காடு

[1993 ஏப்ரல் 2

கள் திட்டமே சுமார் 75 சதவிகித டாகம் தோல்வியுற்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங் காலத்தில் 40 பெர்சன்ட் ஒதுக்கக் கூடிய பணத்தில் 10 பெர்சன்ட் ஒதுக்கி, மீண்டும் 30 பெர்சன்ட் அந்த வன இலாகாவிற்கே கொடுத்தால் இது வெற்றிகரமாக செயல்படும், இதை அமைச்சர் அவர்கள் செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் கீழ் இருக்கின்ற அங்கே இருக்கின்ற நிலங்களிலே இதை நாம் செய் கிறோம். அது போல பொதுப் பணித் துறையிலே இருக்கின்ற ஏரிகளிலே இதை நட்டு தருகிறோம். உள்ளாட்சித் துறைக்கு இதிலே இருந்து வருகின்ற வருமானத்தில், வந்த லாபத்தில், ஏலம் போட்ட உடனே தொகை வழங்கப்படுகிறது. ஏலத் தைப் பொறுத்தவரை, அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருடைய முன்னிலையிலேயே ஏலம் விடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டது, இந்தத் துறையே இதை ஏற்றுக்கொள்ளுமா என்பது. அதற்கு சட்டத்திலே இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்ன சாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுப் பணி துறைக்குச் சொந்தமான இடங்கள் என்று சொன்னார்கள். சென்னைக்கு அருகிலே இருக்கின்ற பல ஏரிகளிலே பார்த்தால் பனை மரங்கள் நிறைய, அதிக அளவில் வளர்ந்து இயற்கையான தோற்றம் அளிக்கிறது. ஆகவே, சுமார் 100 கிலோ மீட்டர் அளவிற்கு மேல் இருக்கின்ற கீழ்பவானி வாய்க்காலில் மற்றும் பல இடங்களில் பனை மரங்களை வளர்த்தால் லட்சக் கணக்கான மரங்களை வளர்க்கின்ற ஒரு வாய்ப்பு உருவாகும். ஆகவே, கீழ்பவானி கரைகளிலே பனை மரங்களை வளர்ப்பதற்கு, சமூக நலக் காடுகளை மேம்படுத்த அமைச்சர் அவர்கள் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்கள் என்றுதான் நான் குறிப்பிடுகிறேன். ஏரிகளிலே என்று நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஏரிகளிலே மரங்கள் நடுவது, பனை மரங்கள் நடுவது என்பது பொதுப் பணித் துறையின் கையிலே இருக்கிறது.

முற்பகல் 10-20.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. க இராத கிருஷ்ணன்.

திரு. த. க. இராதாகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் அந்த மரங்களைப் பொறுத்த வரையில் வெற்றி சதவீதம் எத்தனை? அதாவது மரங்கள் நன்றாக வளர்ந்து இருக்கின்றன என்ற வகையில் அந்த வெற்றி சதவீதம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் திட்டத்தின் அடிப்படையில் இங்கே இருக்கிற வனத்துறையால் பராமரிக்கப் படுகிற அந்த நிலங்களில் வளர்க்கப்படும் மரங்களைப் பொறுத்த வரையில் சுமார் 80-லிருந்து 90 சதவீதம் வரை வெற்றி கிடைக் கிறது. இங்கே உள்ளாட்சித் துறை நிலங்களில் அல்லது புறம் போக்கு நிலங்களில் மரம் நடுகிற நிலையில் 67 முதல் 70 சத வீதம் வரை வெற்றி கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமூகநலக் காடுகள் வளர்ப்பது என்பது இயற் கையைப் பாதுகாப்பதற்கும், மழை வருவதற்கும் ஏற்ற வகை யில் விஞ்ஞான ரீதியாக வைக்கப்படுகிறது என்பதை அந்த மக்களுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருந்தும் சில சமூக விரோதிகள் அந்தக் காடு வளர்ப்புத் திட்டத்தை அழிக்க முயல் கிறார்கள். குறிப்பாக அதிலே பக்கத்து நிலக்காரர்கள் தங்கள் நிலத்தில் நிழல் விழுகிறது என்ற காரணத்தால் அப்படி நிழல் விழாமல் இருக்க அந்தச் செடிகளைப் பிடுங்கி விடுகிறார்கள். அப்படிப்பட்ட அந்த சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் என்பது அந்த கிராமங்களில் இருப்பவர்கள் பயன்பெறுவதற்காக அதா வது விறகுக்காகத்தான். அதற்காகத் தான் அந்தக் காடுகளை வளர்க்கிறோம். அதிலே வளர்கின்ற மரங்களைச் சேதப்படுத்தி னாலோ அல்லது ஏதேனும் செய்தாலோ அந்தத் தடுக்க சட்டங் களிலே இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் கேட்டார்கள். இந்தியத் திருநாட்டில் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற போது ஸ்வீடன் நாட்டிலே இருந்து இந்த சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்கு நிதிகளைத் தருகிற நிலையில் நம்முடைய தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சி வந்ததற்குப் பிறகு தான் இந்தியாவிலேயே ஒரு முன் பாதிரியான மாநிலம், பாராட்டுக்குரிய மாநிலம்

நம்முடைய தமிழகம் தான் என்று அவர்களே பாராட்டி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டம் என்பதன் கீழ் மரக் கன்றுகளை நடுகிறோம். ஆனால் அதைப் பாதுகாப்பதில்லை. இந்த ஆண்டு வைக்கப்பட்ட மரங்கள் எப்படி இருக்கின்றன என்பதை அடுத்த ஆண்டு பாதுகாத்து அதே போல் இப்படி தொடர்ந்து 3 ஆண்டுகள் பாதுகாக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழே வளர்க்கப்படுகிற மரங்களைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டு நடப்பட்ட மரங்கள் அடுத்த ஆண்டில் இருக்கிறதா என்பது மட்டுமல்ல, 5 ஆண்டுகள் அவற்றைப் பராமரிப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழே வளர்க்கப்படுகிற மரங்கள், அங்கே ஏலம் விடப்படுகின்றன. அந்த ஏலத் தொகையானது சாலை வசதி போன்ற பல வளர்ச்சிப் பணிகளுக்காக அந்தந்த ஒன்றியங்களுக்கு அனுப்பப்படுகிறபோது அதிலே காலதாமதம் ஏற்படுகிறது. அதனை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிர்வாகத்தில் இருக்கிறது. ஏலம் போட்டவுடனே 60 சதவீதத் தொகை மாவட்ட ஆட்சித் தலைவரால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கோ, ஊராட்சி மன்றங்களுக்கோ ஒப்படைக்கப்படுகிறது. அந்தப்பணிகளைப் பொறுத்த வரையில் விரைவுபடுத்த வேண்டும் என்றால் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் நினைத்தால் விரைவுபடுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. லாரன்ஸ்.

1993 ஏப்ரல் 2]

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சீதோஷ்ணநிலையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. அந்தந்தப் பகுதிகளில் எந்தெந்த மரங்களை நடலாம் என்பதைப் பரிசீலித்து நடுவதுடன், பயனுள்ள பழம் தருகின்ற அல்லது முந்திரிக் கொட்டை போன்ற மரங்களை நட்டால் ஒருவேளை பொது மக்கள் அதைப் பேணிக் பாதுகாக்கக்கூடும். எனவே இந்த சமூகநலத் திட்டத்தைப் பொறுத்த வரையில் வீட்டுக்கு ஒரு மரம் நடுதல் என்று சொல்கிற அளவுக்கு தமிழகத்திலே ஒரு புதிய திட்டத்தை அரசாங்கம் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டிலே வீட்டுக்கு ஒரு மரம் நட வேண்டும் என்று பல ஆண்டுகளாக இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழங்கள் தருகிற மரங்கள் நடப்படுமா என்று கேட்டார்கள். நீங்கள் 6-ஆம் தேதி எதிர்பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 228, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்.

228—

ரமணிமுதலிபுதூரில் நெசவாளர்களுக்காக வழங்கப்பட்ட சலுகைகள்.

*10401— டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் ரமணிமுதலிபுதூரில் நெசவாளர்களுக்காக இதுவரையில் இத்துறையின் மூலம் வழங்கப்பட்ட சலுகைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதி ரமணிமுதலிபுதூரிலுள்ள 72 நெசவாளர்களில் 58 பேர், சமத்தூர் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடைந்து வரு